**கிராமின் கிருஷி மவுசம் சேவா**
இந்திய வானிலை துறை
தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகம்
கோவை, தமிழ்நாடு

# அக்ரோமெட் ஆலோசனை புல்லட்டின்

**தேதி : 19-05-2023**

**புதுக்கோட்டை(தமிழ்நாடு) வானிலை முன்னறிவிப்பு - அன்று வெளியிடப்பட்ட :2023-05-19 ( அடுத்த 5 நாட்களில் 8:30 IST வரை செல்லுபடியாகும்)**

| வானிலை காரணி | 2023-05-20 | 2023-05-21 | 2023-05-22 | 2023-05-23 | 2023-05-24 |
|---|---|---|---|---|---|
| மழையளவு (மி.மீ ) | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 |
| அதிக பட்ச வெப்பநிலை ( oசெ ) | 39.0 | 41.0 | 40.0 | 40.0 | 39.0 |
| குறைந்த பட்ச வெப்பநிலை (o செ ) | 29.0 | 29.0 | 29.0 | 29.0 | 29.0 |
| அதிக பட்ச காற்றின் ஈரப்பதம் (%) | 65 | 65 | 65 | 65 | 65 |
| குறைந்த பட்ச காற்றின் ஈரப்பதம் (%) | 45 | 45 | 45 | 45 | 45 |
| காற்றின் வேகம் (கி.மீ./மணி ) | 10 | 10 | 10 | 10 | 10 |
| காற்றின் திசை (கோணம்) | 200 | 200 | 200 | 180 | 200 |
| மேக மூட்டம் (ஆக்டா) | 2 | 2 | 4 | 2 | 2 |

### வானிலை சுருக்கம் / எச்சரிக்கை:

அடுத்த ஐந்து நாட்களுக்கு வறண்ட வானிலைக்கு வாய்ப்புள்ளது. அதிகபட்ச வெப்ப நிலை 39.0°C - 41.0°C எனும் வேறுபாட்டிலும், குறைந்தபட்ச வெப்ப நிலை 29.0°C இருக்கும். பொதுவாக வானம் மேகமூட்டத்துடன் காணப்படும் . காற்றின் வேகம் மணிக்கு 10 கிலோமீட்டர் வேகம் இருக்கும் என எதிர்பார்க்கலாம்.

### பொது ஆலோசனை:

விரிவாக்கப்பட்ட வரம்பு மழை முன்னறிவிப்பு : மே 24 முதல் மே 30 வரையிலான காலகட்டத்தில் தமிழ்நாடுட்டில்இயல்பானது மழை பெய்ய வாய்ப்பு உள்ளது . அதிகபட்ச வெப்பநிலை மற்றும் குறைந்தபட்ச வெப்பநிலை இயல்பானது இருக்கும்

### குறுஞ்செய்தி :

வறண்ட வானிலை காணப்படுவதால் தென்னையில் நீர் பாய்ச்சுவதால் பெண் பூக்கள் உற்பத்தி மற்றும் காய் பிடிப்பையும் அதிகரிக்கலாம்.

### பயிர் குறிப்பிட்ட ஆலோசனை:

| பயிர் | பயிர் குறிப்பிட்ட ஆலோசனை |
|---|---|
| மல்லிகை | பூந்தோட்டங்களில் அதிக வெப்பத்தினால் ஏற்படும் தாக்கத்தை குறைக்க பயிர் மூடாக்கு செய்யலாம்.மேலும் இலைப்பேன் மற்றும் அசுவினி தாக்குதல் அதிகமாக வாய்ப்பு உள்ளது.எனவே இதை கண்காணித்து 5% வேப்ப எண்ணெய் கொட்டை வடி கரைசலை தெளிக்கவும். |
| உளுந்து | சித்திரையில் பட்ட உளுந்து சாகுபடி செய்துள்ள விவசாயிகள் உயர் விளைச்சல் பெற ஊட்டச்சத்துக்கள் மற்றும் வளர்ச்சி ஊக்கிகள் அடங்கிய தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் பயறு அதிசயம் ஒரு ஏக்கருக்கு 2 கிலோ என்ற அளவில் தேவையான அளவு ஒட்டும் திரவத்துடன் 200 லிட்டர் தண்ணீரில் கலந்து பூக்கும் தருணத்தில் தெளிப்பதால் வறட்சி தாங்கி காய்கள் அதிகம் பிடித்து 20-25 அதிகம் மகசூல் அடையாளம். |

### தோட்டக்கலை குறிப்பிட்ட ஆலோசனை:

| தோட்டக்கலை | தோட்டக்கலை குறிப்பிட்ட ஆலோசனை |
|---|---|
| வாழை | மாலை நேர காற்றின் ஈரப்பதம் குறைந்து பகல் மற்றும் இரவு நேர வெப்பநிலை உயர்ந்து காணப்டுவதால் .மேலும் 10 கிலோமீட்டர் வேகத்தில் காற்று வீசும் எதிர்பார்க்கப்படுவதால் சூறைக்காற்று ஏற்பட வாய்ப்புள்ளது.எனவே கரும்பு ,வாழை மரங்களுக்கு முட்டுக்கொடுக்கும். |
| முருங்கை | வெப்பநிலை உயர்ந்து வருவதால் முருங்கையில் காய் ஈ வர வாய்ப்புள்ளது.இதற்கு வேப்பம் கொட்டை சாறு 5% தெளிக்கவும் . |
| தென்னை | தென்னை சாகுபடி விவசாயிகள் தென்னையில் கந்தக சத்து பற்றாக்குறை இதன் அறிகுறிகள் :சிற்றிலைகள் பசும் மஞ்சள் அல்லது ஆரஞ்சு மஞ்சள் நிறத்தில் இருக்கும். முதிர்ந்த ஓலைகள் பச்சையாகவே இருக்கும். தண்டுகள் பலவீனமாக இருப்பதால் ஓலைகள் தொங்கி காணப்படும். சில நேரங்களில் மரத்தைச் சுற்றி தண்டின் பலவீனத்தால் வறண்ட ஓலைகள் காணப்படும். காய்கள் முதிர்வதற்கு முன்பாகவே உதிர்ந்துவிடும். கொப்பரை தேங்காய் குறைந்த தரத்துடன் காணப்படும். இதனை கட்டுப்படுத்த வருடத்திற்கு மரம் ஒன்றிற்கு 2-5 கிலோ ஜிப்.சத்தை மண்ணில் இடுதல், 0.2% (1 லிட்டர் தண்ணீருக்கு 2 கிராம்) ஜிப்சத்தை வேர் வழியாக செலுத்த வேண்டும் |

### உயிருள்ள விலங்குகள் குறிப்பிட்ட ஆலோசனை:

| உயிருள்ள விலங்குகள் | உயிருள்ள விலங்குகள் குறிப்பிட்ட ஆலோசனை |
|---|---|
| வெள்ளாடு | பகல் பொழுதில் காணப்படும் அதிக வெப்பத்தின் காரணமாக ஆடு, மாடுகளில் செயற்கை கருத்தரிப்பினை காலையில் 9 |

| உயிருள்ள விலங்குகள் | உயிருள்ள விலங்குகள் குறிப்பிட்ட ஆலோசனை |
|---|---|
| | மணிக்கு உள் அல்லது மாலை 4 மணிக்கு பிறகு செய்ய வேண்டும். |
| பசு | கோடைக்காலங்களில் கறவை மாடுகளுக்கு அதிக புரதச்சத்து உள்ள தீவனங்களை மதிய வேளையில் கொடுப்பதால் செரிமான உஷ்ணம் காரணமாக வெப்ப அயர்ச்சி அதிகரிக்கும். இதை தடுக்க புரதச்சத்து உள்ள தீவனங்களை இரவு நேரங்களில் கொடுப்பதனால் வெப்ப அயர்ச்சி கட்டுப்படும் , அதே நேரத்தில் கறவை மாடுகளுக்கு தேவையான புரதச் சத்து கிடைத்துவிடும். காற்றின் வெப்பநிலை 35 டிகிரி செல்சியஸ் அதிகரிக்கும் போது கறவை மாடுகளில் தண்ணீர் குடிக்கும் அளவு அதிகமாக தோடு உலர் பொருள் உட்கொள்ளும் அளவு குறையும் . இதனால் பால் உற்பத்தி குறைய தொடங்கும் .எனவே பசுந்தீவனத்துடன் புரசத்து உள்ள பசுந்தீவனங்களை கொடுக்கவேண்டும் . |

## கோழிப்பண்ணை குறிப்பிட்ட ஆலோசனை:

| கோழிப்பண்ணை | கோழிப்பண்ணை குறிப்பிட்ட ஆலோசனை |
|---|---|
| கோழி | பகல் நேரங்களில் வெப்பம் அதிகமாக இருந்தால் கோழி பண்ணைகளில் தீவன தொட்டியை காலை 10 மணி முதல் மலை 5 மணி வரை உயர்த்திவைப்பதால் வெப்பத்தாக்கத்தை குறைக்கலாம் . மேலும் குடிநீரில் தாது உப்புக்கள் மற்றும் B காம்ளகஸ் வைட்டமின் கலப்பதால் வெப்ப அயற்சி இருந்து பாதுகாக்கலாம் . கோடை காலத்தில் கால்நடைகளுக்கு ஒட்டுண்ணி தாக்கம் ஏற்படக்கூடும் இவற்றை கட்டுப்படுத்த 3 மில்லி பூடாக்ஸ் மருந்துனை 1 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்கவும். |

## பிற ( மண்/ நில தயாரிப்பு) குறிப்பிட்ட ஆலோசனை:

| பிற ( மண்/ நில தயாரிப்பு) | பிற ( மண்/ நில தயாரிப்பு) குறிப்பிட்ட ஆலோசனை |
|---|---|
| பொது ஆலோசனை | கோடை காலத்தில் 30 முதல் 45 நாட்களுக்கு மேற்பட்ட வேளாண்மை மற்றும் காய்கறிப் பயிர்களில் பயிர்கள் சத்து பற்றாக்குறை மற்றும் பூச்சி தாக்குதலை கட்டுப்படுத்த 350 மில்லி பஞ்சகாவியம் 10 லிட்டர் தண்ணீருடன் ஒட்டும் திரவம் 15 மில்லி கலந்து 15 நாட்கள் இடைவெளியில் இரண்டு முறை தெளிக்க வேண்டும் . |